உ

சிவமயம்.

நீதிநெறிவிளக்கம்

மூலமும்-பதவுரையும்

குமரகுருபரசுவாமிகள்
அருளிச்செய்தது.

இஃது

களத்தூர்த்தமிழ்ப்புலவர்
வேதகிரிமுதலியார்-குமாரர்
ஆறுமுகமுதலியாரால்
பரிசோதித்து
திருவொற்றியூர்
இருசப்பமுதலியார்
குமாரர்
பரசுராமமுதலியாரது
பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது

சுக்ல௵ - ஆடி௴

சிவமயம்

நீதிநெறிவிளக்கம்.

மூலமும்-பதவுரையும்.

நீரிற்குமிழியிளமைநிறைசெல்வ ... *
நீரிற்சுருட்டுநெடுந்திரைக-ணீரி ... *
லெழுத்தாகும்யாக்கைநமரங்காளென்னே *
வழுத்தாததெம்பிரான்மன்று. ... *

பதம்.	பொருள்.
இளமை	இளமைப்பருவமானது
நீரில் ...	நீரிடத்துண்டாகும்
குமிழியாகும்...	குமிழிபோலநிலையில்லாததாம்
நிறைசெல்வம் ...	நிறைந்தசெல்வமானது
நீரில் ...	நீரினிடத்து
சுருட்டும் ...	காற்றினாற்சுருட்டப்படும்
நெடு ...	நெடிய
திரைகளாகும் ..	அலைகள்போலநிலையில்லாததாம்

யாக்கை ... உடம்பானது
நீரில் ... நீரிலெழுதிய
எழுத்தாகும்......எழுத்துப்போல நிலையில்லாத
[தாம்-ஆதலால்
நமரங்காள்...... நம்மவரே
எம்பிரான் .. நம்கடவுளாகியநடேசனுடைய
மன்று ... அம்பலத்தை
வழுத்தாதது ..., வழுத்தாமலிருப்பதற்கு
என் ... ... காரணம்யாது
ஏ ... ... அசை (௧)

அறம்பொருளின்பமும்வீடும்பயக்கும் ..*
புறங்கடைநல்லிசையுநாட்டு-முறுங்கவலொன் *
றுற்றுழியுங்கைகொடுக்குங்கல்வியினூங்கில்லைச் *
சிற்றுயிர்க்குற்ற துணை. .. ... *

பதம். பொருள்.

அறம் ... தருமத்தையும்
பொருள் ... பொருளையும்
இன்பமும் ... இன்பத்தையும்
வீடும் ... மோட்சத்தையும்
பயக்கும் ... தரும்

புறங்கடை ... தலைவாயிலிடத்து
நல்லிசையும் ... ... நல்லபுகழையும்
நாட்டும் ... நிலைநிறுத்தும்
*உறுங்கவலொன்று-மிகுதியாகியஓர்கவலை
உற்றுழியும் ... நேரிட்டவிடத்தும்
கைகொடுக்கும் ... உதவிசெய்யும்ஆதலால்
சிற்றுயிர்க்கு சில்வாழ்நாளையுடையஉயிர்களுக்கு
உற்ற துணை ... பொருந்திய துணை
கல்வியினூங்கு ..... கல்வியின்மிக்கது
இல்லை ... ... வேறில்லை (உ)

---

* வரற்பாலதாகிய கவலையொன்று வந்துழியு மெனினு மமையும்.

தொடங்குங்காற்றுன்பமாயின்பம்பயக்கு ...*
மடங்கொன்றறிவகற்றுங்கல்வி-நெடுங்காம ... *
முற்பயக்குஞ்சின்னீரவின்பத்தின்முற்றிழாய் ...*
பிற்பயக்கும்பீழைபெரிது. ... ... *

பதம். பொருள்.

முற்றிழாய் தொழின்முற்றியஆபரணத்தையுடை
[யபெண்ணே

கல்வி ... கல்வியானது
தொடங்குங்கால்-ஆரம்பிக்குங்காலத்தில்
துன்பமாய்......துன்பத்தைத்தந்து
இன்பம் ... பின்புஇன்பத்தை
பயக்கும் ... தரும்-அன்றியும்
மடம் ... அறியாமையை
கொன்று ... ... கெடுத்து
அறிவு ... அறிவை
அகற்றும் .. விசாலமாக்கும்
நெடுங்காமம் ... மிகுந்தகாமமானது
முன்... ... .. முன்பு
பயக்கும் ... ...கொடுக்கிற
கின்னீர ... ... அற்பத்தன்மையுடைய
இன்பத்தின்... .. இன்பத்தினும்
பின் ... பின்பு
பயக்கும் ...கொடுக்கிற
பீழை ... ... துன்பம்
பெரிது ... மிக்கது (௩)

கல்வியேகற்புடைப்பெண்டிரப்பெண்டிர்க்குச்
செல்வப்புதல்வனேயீர்ங்கவியாச்—சொல்வள *
மல்லல்வெறுக்கையாமாணவைமண்ணுறுத்துஞ் *
செல்வமுமுண்டுசிலர்க்கு. ... .. *

பதம்.	பொருள்.
கல்வியே ...	வித்தையே
கற்புடைப்பெண்டிர் ...	கற்பினையுடையமனைவிய
* ஈரிங்கவியே-	இனிமையாகியசெய்யுளே[ராகவும்
அப்பெண்டிர்க்கு-	அம்மனைவியர்க்கு
செல்வப்புதல்வனு-	செல்வப்புத்திரனுகவும்
சொல்வளம் ...	சொல்லின்வளமே
மல்லல் ...	வளப்பந்தரும்
வெறுக்கையா ...	பொருளாகவும்இருப்பதுமன்றி
சிலர்க்கு ...	சிலருக்கு
மாணவை...	பெருமைதங்கியசபையினுள்ளாரை
மண்ணுறுத்தும்	அலங்கரிக்கத்தக்க
செல்வமும்...	அவையஞ்சாமையாகியசெல்வமும்
உண்டு ...	உண்டாயிருக்கின்றது (ச)

*ஈரிங்கவியாம்-வெறுக்கையாம்- என்னும்பாடத்தி ல்,மனைவியராகவிருக்கின்றது முதலாகப்பொருள் [கொள்க

எத்துணைவாயினுங்கல்வியிடமறிந் .. துய்த்துணர்வில்லெனினில்லாகு - முய்த்துணர் ந்துஞ், சொல்வன்மையில்றெனினென்னாமஃதுநீர் டேற், பொன்மலர்நாற்றமுடைத்து. .....*

பதம்.	பொருள்.
இடமறிந்து	நல்லாசிரியனையறிந்து
எத்துணையவாயினும்	எவ்வளவாகிலும்
* கல்வி	கல்வியை
உய்த்துணர்வு	ஆராய்ந்தறிதல்
இல்லெனின்	இல்லையாயின்
இல்லாகும்	கற்றறிவில்லையாம்
உய்த்துணர்ந்தும்	அவ்வாறாராய்ந்துணர்ந்தும்
சொல்வன்மை	பிறருக்கேற்கச்சொல்லுஞ்சொல்லாற்றல்
இன்றெனின்	இல்லாவிடில்
என்னாம்	அக்கல்வியென்னபயன் படும்
அஃதுண்டேல்	அச்சொல்லாற்றலுமுண்டாயிருந்தால்
பொன்மலர்	பொற்பூ
நாற்றமுடைத்து	மணமுடையதுபோலும் (௩)

*கல்விமிகக்கற்பினும்இடமறிந்தாகித்தாட்பொருள்கொளு முணர்ச்சியின்றாயி னெனப்பொருள்கொள்ளலுமமையும்.

அவையஞ்சிமெய்விதிர்ப்பார்கல்வியுங்கல்லா ...*
ரவையஞ்சாவாகுலச்சொல்லு-நவையஞ்சி... ...*
யீத்துண்ணார்செல்வமுநல்கூர்ந்தாரின்னலமும் *
பூத்தலிற்பூவாமைநன்று ... ... *

பதம்.	பொருள்
அவை ...	...சபையை
அஞ்சி ...	பயந்து
மெய்விதிர்ப்பார்-	உடம்புநடுங்குகிறவர்களுடைய
கல்வியும் ...	...கல்வியும்
அவையஞ்சா...	......அவையையஞ்சாத
கல்லார் ...	மூடர்களுடைய
ஆகுலச்சொல்லும்	ஆரவாரமாகிய மொழிகளும்
நவையஞ்சி ...	.. பொருளீட்டுங் கால்பழிப்பு [ம்பாவமுமாகியகுற்றத்தையஞ்சி
ஈத்து ...	.. இரந்தோர்க்குக்கொடுத்து
உண்ணார் ..	...தாமும் அநுபவியாதவர்களுடைய
செல்வமும்...	செல்வமும்
நல்கூர்ந்தார் ...	தரித்திரர்களுடைய
இன்னலமும்...	இளமைமுதலிய இனிய நலமும்
பூத்தலின் ...	உண்டாதலினும்
பூவாமை ..	உண்டாகாமலிருப்பதே

நன்று... ... நன்மை (௭)

* ஈந்து-ஈத்தெனவிகாரப் பட்டது.

கலைமகள்வாழ்க்கைமுகத்ததெனினு... ... [யி
மலரவன்வண்டமிழோர்க்கொவ்வான்-மலரவன்செ
வெற்றுடம்புமாய்வனபோன்மாயாபுகழ் கொண்
மற்றிவர்செய்யுமுடம்பு ... ... [டு

பதம்.	பொருள்.
கலைமகள் ...	...சரசுவதி
வாழ்க்கை... ...	வாழ்தல்
முகத்ததெனினும்.....	தன்முகத்திடைத்ததாயிருந்தாலும்
மலரவன்...	பிரமனானவன்
வண்	வளமையாகிய
தமிழோர்க்கு ...	தமிழ்ப்புலவர்க்கு
ஒவ்வான் ...	ஒப்பாகான்-ஏனெனில்
மற்றிவர்... ...	இத்தமிழ்ப்புலவர்
புகழ்கொண்டு ...	புகழால்
செய்யும் ...	படைக்கின்ற
உடம்பு ...	உடம்புகள்

மலரவன் ... ...அப்பிரமன்
செய் ... ... படைக்கும்
வெற்றுடம்பு ... பயன்படாவுடம்புகள்
மாய்வனபோல் ... இறப்பனபோல்
மாயா... ... இறத்தலில (எ)

நெடும்பகற்கற்ற வவையத்துதவா ...*
துடைந்துளாருட்குவருங்கல்வி கடும்பக ... ...*
லேதிலான்பாற்கண்டவில்லினும்பொல்லாதே...*
தீதென்றுநீப்பரிதால் ... ...*

பதம். பொருள்.

——— ———

நெடும்பகல் ... பலநாள்
கற்ற ... கற்றநூல்கள் [து
யவையத்து ... கற்றுவல்லோர் சபையினிடத்
உதவாது... ... உதவாமல்
உடைந்துளார்... ...தோற்றவரது
உட்குவரும் ... நாணத்தக்க
கல்வி ... கல்வியானது
கடும்பகல் ... நடுப்பகலில்
ஏதிலான்பால் ... அயலானிடத்து
கண்ட... ... இருக்கக்கண்ட

இல்லினும் ...	தன்மனையாளினும்
பொல்லாதே ...	கொடியதே-ஏனெனில்
தீதென்று ...	அம்மனையாளை நீக்குவது போலக்கொடிதென்று [து
நீப்பரிது ...	... அக்கல்வியை நீக்குவதுகூடா
ஆல் ...	அசை (அ)

வருந்தித்தாங்கற்றன வோம்பாதுமற்றும் ...※
பரிந்துசிலகற்பான்றொடங்கல் - கருந்தனங் ...※
கைத்தலத்தவுய்த்துச் சொரிந்திட்டரிப்பரித்தாங்※
கெய்த்துப்பொருள்செய்திடல் ... ※

பதம்.	பொருள்.
தாம் ...	தாங்கள்
வருந்தி ...	வருத்தமுற்று
கற்றன ...	... கற்ற நூற்பொருள்களை
ஓம்பாது ...	சிந்தித்தல் முதலியவற்றாற் [ற்பாதுகாவாது
மற்றுஞ்சில ...	...வேறுசிலநூல்களை
பரிந்து ...	வருந்தி
கற்பான்றொடங்கல் ...	கற்கப்புகுதல்
கைத்தலத்த ...	கையிற்கிடைத்த

சுருந்தனம் ...	மிக்கபொருள்களை
உய்த்துச்சொரிந்திட்டு	புறத்திற்கொண்டுபோயெறிந்துவிட்டு
அரிப்பரித்து ...	பின்னர் அரிப்பரித்து
ஏய்த்து ..	வருந்தி

பொருள்செய்திடல்-பொருளீட்டல்போலும்
ஆங்கு ... அசை

எனைத்துணையவேனு மிலம்பாட்டார்கல்வி *
இனைத்துணையுஞ்சீர்ப்பாடிலவா-மனைத்தக்காண் *
மாண்பிலளாயின்மணமகனல்லறம் ... ... *
பூண்டபுலப்படாபோல் ... ...*

பதம்.	பொருள்.
மனைத்தக்காள் ...	இல்வாழ்க்கைக்குத்தக்க மனைவியானவள்
மாண்பு	நற்குண நற்செய்கை
இலளாயின் ...	...இல்லாதவளாயின்
மணமகன்	அவள்கணவன்
பூண்ட ...	மேற்கொண்ட

நல்லறம் ... விருந்தோம்பன்முதலிய நல்லதருமங்கள்
புலப்படாபோல் ... விளங்காதனபோல
இலம்பாட்டார் ... தரித்திரர்கற்ற
கல்வி ... கல்விகள்
எனைத்துணைய வேனும் ... எவ்வளவுமி குதியாயினும்
தினைத்துணையும் ... தினையளவும்
சீர்ப்பாடு ... சிறப்புறல்
இலவாம் ... இல்லையாம் (௯)

இன்சொல்லன்றாழ்நடைய னாயினுமொன்றில்
லானேல், வன்சொல்லினல்ல துவாய்திறவா-வென்
சொலினுங், கைத்துடையான்காற்கீ ழொதுங்குங்
கடன்ஞாலம்,பித்துடையவல்லபிற.

பதம். பொருள்.

இன்சொல்லன்... இனியசொல்லையுடையனும்
தாழ்நடையன் ...பணியத்தக்காரிடத்துப் பணியுமியல்புடையோனும்
ஆயினும் ... ஆனாலும்
ஒன்றில்லானேல் பொருட்சிறிது மில்லானாயின்
கடன்ஞாலம்-கடலாற்சூழப்பட்ட-இவ்வுலகத்தார்

வன்சொல்லினல்லது ... அவன்முகநோக்கிக்கடுஞ்சொற்சொல்லுதலன்றி
வாய்திறவா ... இன்சொற்சொல்லார்
கைத்துடையான் ......பொருளுடையான்
என்சொலினும் ......கடுஞ்சொற்சொல்லினும்
காற்கீழ் ... அவன்காற்கீழ்
ஒதுங்கும் ... ஒதுங்குவார்கள்- ஆதலால்
பித்து ... பயித்தியகுணத்தை
உடைய ... உடைவர்களேயல்லாமல்
பிறவல்ல ...நற்குணங்களையுடையாரலர் (௰௧)

இவறன்மைகண்டுமுடையானையாருங் ... ...*
குறையிரந்துங்குற்றேவல்செய்ப-பெரிதுந்தா *
முற்பகலோலாதார்நோற்றாற்பின்செல்லல்...*
கற்பன்றேகல்லாமையன்று ... ...*

பதம். பொருள்.

இவறன்மை ... ... உலோபகுணமுடைமையை
கண்டும் ... ... அறிந்திருந்தும்
உடையானை ...செல்வமுடையவர்களை
யாரும் ... யாவரும்

குறையிரந்தும் ... தங்குறைசொல்லியிரந்தும்
குற்றேவல் ... ஏவியசிறுதொழில்களை
செய்ப... ... செய்வார்கள்
பெரிதும் ... மிகுதியும்
முற்பகல் ... முன்னாள்
நோலாதார் ... தவஞ்செய்யாதார்
நோற்றாரை ... தவஞ்செய்தவர்களை
பின்செல்லல் ... ...பின்தொடர்ந்துபோதல்
கற்பன்றே ... நியமமன்றோ-ஆதலின்-
கல்லாமையன்று .. அஃதறியாமையன்று
தாம் ... சாரியை (௰௨)

கற்றார்க்குக்கல்வி நலனேகலனல்லால் ... ※
மற்றோரணிகலம்வேண்டாவா-முற்ற .. ..※
முழுமணிப்பூணுக்குப்பூண்வேண்டாயாரே ...※
யழகுக்கழகுசெய்வார் ... ...※

பதம். பொருள்.

கற்றார்க்கு ... ... கற்றுணர்ந்தவர்க்கு
கல்விநலனே ... கல்வியறிவே
கலனல்லால் ... ஆபரணமன்றி

மற்றோணிகலம் ... வேறோபரணம்
வேண்டாவாம் ... வேண்டப்படுததில்லையாம்
முழுமணி ... பருத்தமணிகளழுத்திய
பூணுக்கு ... ஆபரணங்களுக்கு
பூண் ... வேருபரணங்கள்
முற்ற ... ... ஒருகாலும்
வேண்டா ... ...வேண்டப்படா
யாரோ ... யாவர்தாம்
அழகுக்கு ... ...அழகினுக்கு
அழகுசெய்வார் ...அழகுசெய்பவர்கள் (கரு)

முற்றுமுணர்ந்தவரில்லைமுழுவதூஉங் ...*
கற்றனமென்றுகளியற்க-சிற்றுளியாற் ... .*
கல்லுந்தகருந் தகராகனங்குழாய் ... *
கொல்லுலைக்கூடத்தினல் ... ... *

பதம்.	பொருள்.
கனங்குழாய் ...	கனத்தகாதணியையுடையமாதே
முற்றும் ...	எல்லாம்
உணர்ந்தவர் ...	...அறிந்தவர்கள்

இல்லை ... ... இல்லை ஆதலால்
முழுவதூஉம் ... எல்லாம்
கற்றனமென்று ... யாம்படித்துணர்ந்தனமென்று
களியற்க ... களிப்படையற்க-ஏனெனில்
சிற்றுளியால் ... ...சிற்றுளியால்
கல்லும் ... மலைகளும்
தகரும் ... உடையும்
கொல் ... ... கொல்லனது
உலை ... ... உலைமுகத்திற்செய்த
கூடத்தினால் ... சம்மட்டியால்
தகரா ... ... அம்மலைகளுடையா (௧௪)

தம்மின்மெலியாரைநோக்கித் தமதுடைமை *
யம்மாபெரிதென்றகமகிழ்க-தம்மினுங் ... *
கற்றாரைநோக்கிக் கருத்தழிககற்றதெல்லா ... *
மெற்றேயிவர்க்குநாமென்று ... ... *

பதம். பொருள்.

தம்மின் ... தம்மினும்
மெலியாரை ... எளியாரை
நோக்கி ... பார்த்து

தமதுடைமை .. தாமுடையபொருள்
பெரிதென்று ... மிக்கதென்று
அகமகிழ்க... ... மநமகிழ்க
தம்மினும் ... ...தம்மினுமதிகமாக
கற்றாரை ... படித்தவர்களை
நோக்கி ... பார்த்து
நாங்கற்றதெல்லாம்-யாங்கற்றதுமுழுதும்.
இவர்க்கு ... இவர்க்குமுன்
எற்றேயென்று ... எத்தன்மைத்தாமென்று கருதி
கருத்தழிக ... ...மநம்வருந்துக (௧௫)

அம்மா ... வியப்பு

கல்வியுடைமைபொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ்செல்வமெனப்படு-மில்லார்........*
குறையிரந்துதம்முன்னர்நிற்பபோற்றாமுந் ...*
தலைவணங்கித்தாழப்பெறின் ... ...*

பதம். பொருள்.

இல்லார் ... ... இருவகைச்செல்வமு மில்லாதார்
குறையிரந்து தமதுகுறையைச்சொல்லியிரந்து
தம்முன்னர் ... தம்மெதிரில்

நிற்பபோல் ...நிற்றல்போல
தாமும் ......இருவகைச்செல்வமுடையாரும்
தலைவணங்கி... தலையால்வணங்கி
தாழப்பெறின் தாழ்வாராயின்
கல்வியுடைமை-கல்வியுடையராதல்
பொருளுடைமை-பொருளுடையராதல்
என்றிரண்டுசெ...என்னுமிரண்டுசெல்வமும்
ல்வமும்
செல்வமெனப்படும்-செல்வமென்றுணர்ந்தோரா
[ற்சொல்லப்படும்

ஆக்கம்பெரியார்சிறியாரிடைப்பட்ட ...*
மீச்செலவுகாணி னனித்தாழ்ப-தூக்கின் ... *
மெலியதுமேன்மேலெழச்செல்லச்செல்ல ... *
வலிதன்றேதாழுந்துலைக்கு ... ...*

பதம்.	பொருள்.
ஆக்கம்பெரியார்-	கல்விமுதலியசெல்வத்திற்பெரியோர்
சிறியாரிடைப்ப...ட்ட	சிறியோரிடத்துண்டாகிய
மீச்செலவு	வரம்பிகந்தநடத்தையை

காணின் ... ...கண்டால்
தனி ... ... மிக
தாழ்ப ... ... தாழ்வார்கள்
தூக்கின் ... ...ஆராயுங்கால்
துலைக்கு ... ...துலாக்கோலில்
மெலியது... ... நொய்யபொருளுள்ளதட்டு
மேன்மேல் ... ...மேல்மேல்
எழச்செல்லச்செல்ல-உயர்ந்துசெல்லுந்தோறும்

வலிதன்றே...திண்ணியபொருளுள்ளதட்டன்றோ
தாழும்... ... தாழுகின்றது (௧௭)

விலக்கியவோம்பிவிதித்தனவேசெய்யு .. ...*
நலத்தகையார்நல்வினையுந்தீதே-புலப்பகையை *
வென்றனநல்லொழுக்கி னின்றேம்பிறவென்று *
தம்பாடுதம்முற்கொளின் ... ... *

பதம். பொருள்.

புலப்பகையை ... விடயமாகியபகையை
வென்றனம் ... யாம்வென்றேம்
நல்லொழுக்கின் ... நல்லொழுக்கங்களினும்
நின்றேமென்று .....வழுவாமனின்றேமென்று

தம்பாடு ... ... தம்பெருமையை
தம்மிற்கொளின் தமச்குள்தாமேமதித்துக்
[கொள்வராயின்.
விலக்கிய ... .. செய்யப்படாவென்று நீக்கிய
[கருமங்களை
ஓம்பி ... செய்யாமற்பாதுகாத்து
விதித்தனவே ... செய்கவென்றுநியமித்தகரு
[மங்களையே
செய்யும் ... .செய்யாநின்ற
நலத்தலையார் .. நற்றகுதியையுடையார்
நல்வினையும் ... .. அவர்செய்யும்-நல்லகருமமும்
தீதே ... தீயதேயாம்
பிற ... அசை (கஅ)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்ந்தறீச்சுடர் ... *
நன்னீர்சொரிந்துவளர்த்தற்றாற்-றன்னை ... .. *
வியவாமையன்றே வியப்பாவதின்ப ...
நயவாமையன்றேநலம் ... ... *

பதம். பொருள்.

தன்னை ... .. தன்னை
வியப்பிப்பான் யாவருநன்குமதிக்கநினைப்பவன்

தற்புகழ்தல் ..... தன்னைத்தானே புகழ்ந்து [கொள்ளுதல் எத்தன்மைத்தெனில்
நன்னீர் ... நல்லநீரை
சொரிந்து - த்தளியில்வார்த்து
தீச்சுடர்... தீவிளக்கை
வளர்த்தற்று-பிரகாசிக்கச்செய்ததுபோ [லாம் -ஆதலால்

தன்னை ... ...தன்னை
வியவாமையன்றேநன்குமதியாமலிருப்பதன்றோ
வியப்பாவது . மதிப்பென்று சொல்லப்படுவது
இன்பநயவாமையன்றேசுகத்தையொன்றையும்வி [ரும்பாமையன்றோ-
நலம் ... இன்பமாவது (கக)

பிறராற்பெருஞ்சுட்டுவேண்டுவான்யாண்டு... *
மறவாமேநோற்பதொன்றுண்டு-பிறர்பிறர் ... *
சீரெல்லாந்தூற்றிச்சிறுமைபுறங்காத்து ... ...*
யார்யார்க்குந்தாழ்ச்சிசொலல் ... ... *

பதம். பொருள்.

பிறரால் ... ...மற்றையோரால்

பெருஞ்சுட்டு ......நன்குமதிக்கப்படுதலை
வேண்டுவான் ... ...தானடையவிரும்புகிறவன்
யாண்டும் ... ...மறக்கத்தக்க காரணமுண்
[டானவிடத்தும்
மறவாமே ... ..மறவாமல்
நோற்பதொன்றுண்டு நியமமாக ஆசரிப்பதொரு
[கருமமுளது அதென்னவெனில்
பிறர்பிறர்... ... மற்றையோருடைய
சீரெல்லாம் ... ... சிறப்பையெல்லாம்
தூற்றி ... ... பலரறியச்சொல்லி
சிறுமை ... ...அவர்கள்குற்றத்தை
புறங்காத்து ... ...அடக்கி
யார்யார்க்கும் ... ... எல்லோர்க்கும்
தாழ்ச்சிசொலல் ... தாழ்மையானவசனங்களைச்
சொல்லுதலாம் (உய)

கற்றுப்பிறர்க்குரைத்துத்தாநில்லார்வாய்ப்படூஉம்
வெற்றுரைக்குண்டோர்வலியுடைமை - சொற்றநீர்
நில்லாததென்னென்றுநாணுறைப்பநேர்ந்தொரு
சொல்லாமேசூழ்ந்துசொலல். ... [வன்

பதம். பொருள்.

கற்று ... ... நூல்களைக்கற்றுணர்ந்து

பிறர்க்கு ... மற்றையோர்க்கு
உரைத்து ... நன்னெறிகளைக்கூறி
தாநில்லார்... ...தாமந்நெறியினில்லாதார்
வாய்ப்படூஉம்...வாயினிடத்துண்டாகும்
வெற்றுரைக்கு . பயனில்லாச்சொல்லுக்கு
ஓர்வலியுடைமை . ஓராற்றலுடைமை
உண்டு ... உண்டு-அதென்னெனில்
சொற்றநீர் ... பிறர்க்குநன்னெறிசொல்லிய நீவிர்
நில்லாதது...... அந்நெறியினில்லாததற்கு
எவ்னென்று ... யாதுகாரணமென்று
நாணுறைப்ப ...வெட்கமுண்டாகும்படி
நேர்ந்தொருவன் ஒருவன் தன்னையெதிர்த்து
சொல்லாமே... சொல்லாதவண்ணம்
சூழ்ந்துசொலல்-ஆராய்ந்துசொல்லுதலாம் (உக)

பிறர்க்குப்பயன்படத்தாங்கற்றவிற்பார்... ..*
தமக்குப்பயன்வேறுடையார்-திறப்படூஉம் ...*
தீவினையஞ்சாவிறல்கொண்டுதென்புலத்தார் ...*
கோவினைவேலைகொளல் ... ... *

பதம். பொருள்.

தாங்கற்ற ... தாங்கற்றநூற்பொருட்களை

பிறர்க்கு......பிறருக்கு
பயன்பட ...பயனுண்டாக
விற்பார்......விற்பவர்கள்
தமக்கு..... தங்களுக்கு
பயன்வேறு-வேறோர்பயனை
உடையார்...உடையவராவர்அதென்னவெனில்
திறப்படூஉம்-பொய்களவுமுதலாகப் பலவகைப்
[பட்ட
தீவினை ... தீவினைசெய்தற்கு
அஞ்சா ... ...பயப்படாத
விறல்கொண்டு ...வலியடைந்து
தென்புலத்தார்...பிதிர்களுடைய
கோவினை ... அரசனாகியநமனை
*வேலைகொளல்-தொழில்கொள்ளுதல் (உஉ)

---

* வேலைகொளல்-தண்டிப்பித்தலாம்

கற்பனவூழற்றார்கல்விக்கழகத்தாங்... ...*
சொற்கபின்றாத்தைவாயங்காத்தன்-மற்றுத்தம் *
வல்லுருவஞ்சன்மினென்பவேமாபறவை... ...*
புல்லுருவஞ்சவபோல் ... ...*

பதம். பொருள்.

கற்பன ... கற்குநூல்களைக்கற்கத்தகக
ஊழற்றார் ... ...நல்வினையில்லாதார்
கல்விக்கழகத்து...புலவர்சபையில்
ஒற்கம் ... நாவடக்கம்
இன்று ... இன்றி
ஊத்தைவாய் ... அசுத்தமாகியவாயை
அங்காத்தல்... ...திறத்தல்எத்தன்மைத்தாமெனில்
மா ... மிருகங்களும்
பறவை ... பட்சிகளும்
புல்லுரு... ...புல்லாற்செய்தஉருவத்தைக்கண்டு
அஞ்சுவபோல்... பயப்படுவனபோல்
தம் ... தம்முடைய
வல்லுரு ... வலியவுருவைக்கண்டு
அஞ்சன்மின்... ..அஞ்சுதலொழிக
என்ப ... என்றுசொல்லுவபேர்களாம்
ஆங்கு-மற்று-ஏ-அசை (உ௬)

போக்கறுகல்வி புலமிக்கார்பாலன்றி ...*
மீக்கொணகையினார் வாய்ச்சேரா-தாக்கணங்கு...*

மாணவாம்பெண்மையுடைத்தெனினும் பெண்ண
பேடுகொளப்படுவதில் ... [லம்

பதம்.	பொருள்.
போக்கறுகல்வி ...	குற்றமற்றகல்விகள்
புலமிக்கார்பாலன்றி ...	அறிவின்மிக்காரிடத்தல்றி
மீக்கொணகையினார்வாய் -	நகையாடலைமேற்கொண்டொழுகுவாரிடத்து
சேரா ...	சேராவாம்
தாக்கணங்கும்	திருமகளும்
ஆணவாம்	புருடனுக்கசையைவிரும்பத்தக்க
பெண்மை ..	பெண்தன்மையாகிய அழகை
உடைத்தெனினும்	ஒருபெண்ணுடையளாயினும்
பேடு ...	...அலியால்
கொளப்படுதல் ...	கொள்ளப்படுவதில்லை (உச)

கற்றனகல்லார்செவிமாட்டிக்கையுறாஉங் .. *
குற்றந்தமதேயிறிதன்று முற்றுணர்ந்துந் ... ...*
தாமவர்தன்மையுணராதார்தம்முணரா .. *
வேதிலரானோவதெவன் ... ... *

பதம்.	பொருள்.
கற்றன ...	தாங்கற்றநூல்களின்பொருட்[களை
கல்லார் ...	மூடர்களுடைய
செவி ...	...காதுகளில்
மாட்டி ...	புகுத்தி
கையுறூஉம் ...	அவராலவமதிக்கப்படுதற்கு[க்காரணமாகிய
குற்றம் ...	பிழை
தமதே ...	தம்மாற்செய்துகொண்டதே
பிறிதன்று...	அவர்செய்ததன்று ஆதலால்
தாம் ...	தாம்
முற்றுணர்ந்தும் ..	முழுவதுந்தெரிந்தும்
அவர்தன்மை ...	...அம்மூடருடையதகுதியை
உணராதர் ...	அறியாதார்
தம்முணரா ...	...தம்முடையதகுதியை யறியா[த
ஏதிலரா ...	அயலாரை
நோவது ...	வெறுப்பது
எவன் ...	...யாது (உரு)

வேத்தவைகாவார்மிகன்மக்கள்வேறுசிலர் ...*
காத்ததுகொண்டாங்குவப்பெய்தார்- மாத்தகைய
வந்தப்புரத்ததுபூஞைபுறங்கடைய ... ...*
கந்துகொல்பூட்கைக்களிறு ... ...*

பதம்.	பொருள்.
மிகன்மக்கள் ...	மேலோர்
வேத்தவை ...	இராசசபையில்
காவார் ...	...காத்துக்கொண்டிரா ராயி [னுஞ்சிறப்படைவர்
வேறுசிலர் ...	கீழோர்
காத்ததுகொண்டு...	அச்சபையைக்காத் திருந்தத [னால்
உவப்பெய்தார் ..	மகிழ்ச்சியை யடையார்
பூஞை ...	பூனையானது
மாத்தகைய ...	பெருந்தகுதியையுடைய
அந்தப்புரத்தது ..	அந்தப்புரத்திருப்பினுஞ் சிற [ப்படையாது
கந்துகொல் ...	கட்டுத்தறியைமுறிக்காநின்ற
பூட்கைக்களிறு ..	வலியையுடையயானைகள்

புறங்கடைய ... தலைவாயிலிடத்திருப்பி
[னுஞ்சிறப்படையும்
ஆங்கு ... ... அசை (உரு)

குலமகட்குத்தெய்வங் கொழுநனேமன்ற ...*
புதல்வர்க்குத்தந்தையுந்தாயு-மறவோர்க் ......*
கடிகளேதெய்வமனைவோர்க்குந்தெய்வ ...*
மிலைமுகப்பைம்பூணிறை ... ...*

பதம். பொருள்.

குலமகட்கு ... கற்புடையாளுக்கு
தெய்வம் ... தெய்வம்
கொழுநனே ... தன்கணவனே
புதல்வர்க்கு ... புத்திரர்களுக்குத்தெய்வம்
தந்தையுந்தாயும்- தந்தையுந்தாயுமே
அறவோர்க்கு ... பிரமசரியமுதலிய அறநிலைநின்
[றோர்க்கு
தெய்வம் ... தெய்வம்
அடிகளே ... குருவே
அனைவோர்க்கும் .. எல்லாருக்கும்
தெய்வம் ... ...தெய்வம்

இலைமுகப்பைம் ... இலைமுகம்போற்றொழின்முற்
[பூண். [றியபைம்பொன்னணிகளணிந்த
இறை ... அரசனும் (உஎ)

மன்ற - தேற்றத்தின்கண்வந்தது.

கண்ணிற்சொலிச்செவியி னோக்குமிறைமாட்சி
புண்ணியத்தின்பாலதேயாயினுந்- தண்ணளியான்
மன்பதையோம்பாதார்க்கென்னும்வயப்படைமற்
றென்பயக்குமாணல்லவர்க்கு ... ...*

பதம். பொருள்.

கண்ணில்... ...கண்ணால்
சொலி... ... சொல்லி
செவியின் ... காதினால்
நோக்கும் ... பார்க்காநின்ற
இறைமாட்சி ... பெருமிதமாகிய அரசச்செல்வம்
புண்ணியத்தின்...முன்செய்தநல்வினையின்
பாலதேயாயினும்-பகுதியதானாலும்
தண்ணளியால் ...தண்மையாகிய அன்பினால்
மன்பதை ... மனிதர்களை
ஓம்பாதார்க்கு ...பாதுகாவாத அரசர்களுக்கு
என்னும் ... அவ்வரசச்செல்வம்எதுபயனும்

வயப்படை ...	வலிதங்கிய ஆயுதமானது
ஆணல்லவர்க்கு -	ஆண்மையில்லாதவர்களுக்கு
என்பயக்கும் ...	ஏதுபயன்செய்யும்
மற்று	அசை (உஅ)

குடிகொன்றிறைகொள்ளுங்கோமகற்குக்கற்று *
மடிகொன்றுபால்கொளலுமாண்பே - குடியோம்பிக், கொள்ளுமாகொளவோர்க்குக் காண்டுமேமாநிதியம், வெள்ளத்தின்மேலும்பல ... ... *

பதம்.	பொருள்.
குடி	குடிகளை
கொன்று ...	வருத்தி
இறை	இறையை
கொள்ளும் ...	வாங்குகிற
கோமகற்கு ...	அரசனுக்கு
கற்று	கன்றையுடைய பசுவின்
மடி	மடியை
கொன்று ...	கொய்து
பால் ...	பாலை

கொளலும் ... கொள்ளுதலும்
மாண்பே ... நற்செய்கையே
குடி ... ... குடிகளை
ஓம்பி ... பாதுகாத்து
கொள்ளுமா ... இறைவாங்குமுறைமையறிந்து
கொள்வோர்க்கு வாங்குகிற அரசர்க்கு
மாநிதியம் ... பெருநிதியம்
வெள்ளத்தின்... வெள்ளமென்னுந்தொகையினும்
மேலும்பல மிக்குப்பலவாகவிருக்க
காண்டுமே .... கண்டோமே (உ௫)

இன்றுகொளற்பால நாளைக்கொளப்பொரு *
ளின்றுகுறையிரப்பநேர்படான்-சென்றொருவ *
னாவணகூறினையிறலைப்பாறலைக்கும் *
வேடலன்வேந்துமலன் ... ... *

பதம். பொருள்.

இன்று ... ... இன்று
கொளற்பால வாங்கிக்கொள்ளத்தக்க பொருள்களை
நாளை ... ... மறுநாள்

கொளப்பொறான் ..	வாங்கப்பொறான்
நின்று ...	எதிரிலேநின்று
குறையிரப்ப	குறையைச்சொல்லியிரப்ப
நேர்படான் ...	காணப்படான்
சென்றொருவன்	ஒருவன்போய்
ஆவன	தனக்குவேண்டியவற்றை
கூறின்	சொன்னால்
எயிறலைப்பான்	தன்பல்லைக்கடித்துறுக்குவான் ஆதலாலித்தகுதியுள்ள அரசன் காட்டிலிருந்துபறியாமையால்
ஆறலைக்கும் ...	வழிபறிக்கும்
வேடலன்	வேடனலன்
வேந்துமலன் ...	குடிகளையோம்பாமையால் அரச[னுமல்லன். (௫௰)

முடிப்பமுடித்துப்பின்பூசுவபூசி ...
யுடுப்பவுடுத்துண்பவுண்டு—விடுத்திடுத்துக்
கட்டுரைகூறிற்செவிக்கொளாகண்விழியா
நெட்டுயிர்ப்போடுற்றபிணம் ...

பதம்.	பொருள்.
முடிப்ப ..	முடிக்கத்தக்கமலர்களை

முடித்து ... முடித்துக்கொண்டு
பின் ... ... பின்பு
பூசிவ ...சலவைமுதலியபூசத்தக்கபூச்சுகளை
பூசி ... ... பூசிக்கொண்டு
உடுப்ப ... ... பட்டாடைமுதலியஉடுக்
[கத்தக்கஉடைகளை
உடுத்து ... உடுத்திக்கொண்டு
உண்ப ... ...சோறுமுதலியஉண்ணத்
[தக்கஉண்டிகளை
உண்டு ... உண்டுஉயிர்த்தன்மைகாட்டி
இடித்திடித்து பலமுறைநெருங்கி
கட்டுரை ... உறுதிச்சொல்லை
கூறின் ... சொன்னால்
செவிக்கொளா ... காதிற்கொள்ளாதனவாய்
கண் ... கண்களை
விழியா ... திறவாதனவாய்ப்பிணத்த
[ன்மையெய்துதலின்அவ்வேந்துகள்
நெட்டுயிர்ப்பொடு ... பெருமூச்சோடு
உற்ற ... கூடிய
பிணம் ... பிணங்களாம் (௩௧)

ஒற்றிற்றெரியா சிறைப்புறத்தோர்துமெனப்
பொற்கேள்வியாற்றெரிதந்தும்-குற்ற ... ...

றறிவரிதென் றஞ்சுவதேசெங்கோன்மைசென்று *
முறையிடினுங்கேளாமையன்று ... *

பதம்.	பொருள்.
ஒற்றில் ...	[வேவுகாரர்சொல்லுதன்மாத்திரத் [தால்
தெரியா	உண்மை அறியப்படா ஆதலால்
இறைப்புறத்து ...	யாமும்-ஒதுக்கிடங்களிற்சென் [றிருந்து
ஓர்துமென	அறிவேமென்று
பொற்றூள் ...	வேறு துணையின்றித்தமது பொற்றோளோ
துணையா	தமக்குத் துணையாகச்சென்று
தெரிதற்றும்	தாமேதெரிந்து கொள்ளினும்
குற்றம் ...	ஒருவரிடத்துக்குற்றங்களை
அறிவரிதென்று	நிச்சயிப்பதெளிதன்றென்று
அஞ்சுவதே	பயப்படுவதே
செங்கோன்மை	அரசநீதியாம்அவ்வாறன்றி
சென்று ...	ஒருவன் போய்
முறையிடினும்	தன்குறைகளைச்சொன்னாலும்
கேளாமை ...	காதுகொடாமை
அன்று ...	அரசநீதியன்று (௩௨)

எதிலார்யாதுப்புகலவிறைமகன் ... *
கோதெரிஇகொள்கைமுதுக்குறைவு-நேர்நின்று *
காக்கைவெளிதென்பாரென்சொலார்தாய்க்கொலை *
சால்புடைத்தென்பாருமுண்டு ... *

பதம்.	பொருள்.
காக்கை	காக்கைக்கு
நேர்நின்று ...	எதிரில்நின்று
வெளிதென்பார்	வெள்ளையென்றுசாதிப்பவர்
என்சொலார்	வேறென்னவிபரீதஞ்சொல்லுதற்குத்தாழ்வார்
தாய்க்கொலை	தாயின்கொலை
சால்புடைத்து	அமதியுடைத்து
என்பாரும்	என்றுசொல்வாரும்
உண்டு ...	சிலருளர்
ஏதிலார் ...	அந்நியர்
யாதுப்புகல	மெய்யேயன்றிப்பொய்சொல்லினும்
இறைமகன்	அரசன்கேட்டவைகளில்
கோது ...	குற்றத்தை

ஒரீஇ ... நீக்கி
கொள்கை ... குணத்தையேற்றுக்கொள்ளுதல்
மூதுக்குறைவு பேறிவாம் (௩௩)

கண்கூடாப்பட்டதுகேடெனினுங்கீழ்மக்கட் *
குண்டோவுணர்ச்சிமற்றில்லாகு-மண்டெரி *
தான்வாய்மடுப்பினுமாசுணங்கண்டுயில்வ *
பேராபெருமுச்செறிந்து ... *

பதம், பொருள்,

மண்டெரி ... மிகுந்தீயானது
வாய்மடுப்பினும் ...தன்னிடத்துச்சூழ்ந்துகொண்
[டாலும்
மாசுணம் ... பெரும்பாம்புகள்
பெருமூச்சு ... நெட்டுயிர்ப்பு
எறிந்து ... விட்டுக்கொண்டு
பேரா ... நீங்கா
கண்டுயில்வ நித்திரைசெய்வன அதுபோல்
கண்கூடாப்பட்ட...கேடுகண்ணுக்குப் புலப்பட்ட
துகேடெனினும்] [தாயினும்

கீழ்மக்கட்கு ... மூடருக்கு
உண்டோவுணர்ச்சி அக்கேட்டிலொழிதற்கு அறிவு
[ண்டாகுமோ
இல்லாகும் ... இல்லையாகும்
மற்று-தான் ... அசை (கச)

நட்டுப்பிரித்தல்பகைநட்டலொற்றிகழ்தல் *
பக்கத்தாரியாரையுமையுறுத-றக்கார் ... *
நெட்டொழிகோறல் குணம்பிறிதாதல் *
கெடுவதுகாட்டுங்குறி *

பதம்.	பொருள்.
நட்பு	நட்டோரை
பிரித்தல்	பகையாக்கிக்கொள்ளுதலும்
பகை	பகைவரை
நட்டல்	சிநேகித்துக்கொள்ளலும்
ஒற்று ...	வேவுகாரரை
இகழ்தல் ...	அவமதித்தலும்
பக்கத்தார்	அருகிலுள்ளோர்
யாரையும்	எல்லாரிடத்திலும்
ஐயுறுதல்	சந்தேகப்படலும்

தக்கார் ... ...பெரியோருடைய
நெடுமொழி .. உறுதிமொழிகளை
கோறல் ... ...இகழ்தலும்
குணம்பிறிதாதல்...இயல்பாகியகுணம்வேறுபடலு[ம்
கெடுவது ... வரக்கடவகெடுதியை
காட்டும்... ... முன்னர் அறிவிக்கின்ற
குறி... ... .. குறிகளாம் (௯௫)

பணியப்படுவார்புறங்கடையராகத் ... *
தணிவில்களிப்பினாற்றாழ்வார்க்-கணிய ... ...*
இளையாண்முயக்கெனினுஞ்சேய்த்தென்றேமூத்தா
புணர்முலைப்போகங்கொளல்... ... .. [ள்

பதம் பொருள்

பணியப்படுவார்...நம்மால்வணங்கத்தக்கபெரியோ[ர்
புறங்கடையராக... நமது தலைவாயிலிலிருக்க
தணிவில் ... ...அமைவில்லாத
களிப்பினால் ... செல்வமகிழ்ச்சியினால்

தாழ்வார்க்கு ... அவர்களையெதிர்கொள்ளலின்றி
[த்தாமதிப்போர்க்கு
இளையாண்டியக்கு-திருமகள்போகம்
அணியதெனினும்-தம்மையடுத்திருப்பதாயினும்
மூத்தாள் ... மூதேவியின்
புணர்முலைப்போகங்கொளல்-புணர்முலைப் போகத்
[தைஅநுபவித்தல்
சேய்த்தன்று ... தூரமன்று
ஏ ... ... அசை (ரு௯)

கண்ணேக்கரும்பாநகைமுகமேநாண்மலரா... *
விண்மொழியின்வாய்மையேதீங்காயா-வண்மை *
பலமாநலங்கனிந்தபண்புடையாரன்றே ... *
சலியாதகற்பதரு ... ... *

பதம். பொருள்.

கண்ணேக்கு ... கண்ணின்பார்வையே
அரும்பா ... முகையாகவும்
நகைமுகமே ... இனியமுகமே
நாண்மலரா ... புதியமலராகவும்

இன்மொழியின் வாய்மையே	உண்மையாகிய இன்சொல்லே
தீங்காயா ...	மதுரமுள்ள காயாகவும்
வண்மை ...	கொடையே
பலமா ...	...பழமாகவும்
நலங்கனிந்த	இவ்வாறு நன்மைகளைப் பயக்கின்ற
பண்புடையாரன்றே-	பண்புடையவர்களன்றோ
சலியாதகற்பதரு...	கொடுப்பதிற் சலியாத கற்பதரு
	[வாவர் (கள)

வாங்குங்கவளத் தொருசிறிதுவாய்தப்பிற் *
றாங்குங்களிறோ தயருறா-வாங்கதுகொண் *
டூருமெறும்பிங் கொருகோடியுய்யுமா *
லாருங்கிளையோடயின்று ... ... *

பதம். பொருள்.

வாங்கும் ...	தான்வாங்கிக்கொள்ளும்
கவளத்தொரு	ஒருகவளத்தில்
சிறிது ...	சிறிதரிசி
வாய் ...	வாயிலிருந்து

தப்பில் ... தவறிவீழ்ந்தால்
தூங்கும் ... அசைகின்றவியல்பினையுடை
களிறே யானைகளோ
துயருறு துன்பமுறு
ஆங்கு ... அவ்விடத்து
அதுகொண்டு ... அக்களத்தில்தவறுவதைக்கொ
[ண்டு
ஊரும் ... ஊருகின்ற
ஒருகோடியெறும்பு- ஒருகோடியெறும்புகள்
இங்கு ... இவ்வுலகத்து
ஆரும் ... நிறைகின்ற
கிளையோடு சுற்றத்தோடு
அயின்று உண்டு
உய்யும் ... பிழைக்கும்
ஆல் ... அசை (௧அ)

மாசன்சிறுகக்குவித்துநிதிக்குவை ... *
மிலைகயினைக்கழுத்தமிச்சுடைய-மாகோல் ... *
டமைசமுகத்தவெள்வேலான்பார்வையிற்றீட்டு ... *
நகைமுகத்தநன்குமதிப்பு ...] ... *

பதம். பொருள்.

சிறுக ... ... சிறிதென்றுசொல்லும்படி

திக்குவை	பொருட்குவையை
நவித்து...	மிகுதியாகக்குவித்து
கையின் ...	ஒருவனுக்குக்கொடுப்பதினும்
ாகொல்...	யானையைக்கொல்லுகிற
கைமுகத்த ...	பகைமைத்தன்கண்ணுடைய
வெள் ...	பிரகாசம்பொருந்திய
வேலான் ...	வேலைத்தாங்கிய அரசனுடைய
பார்வையில் ...	பார்வையால்
ட்டும் ...	எழுதப்படுகின்ற
நகைமுகத்த	மலர்ந்தமுகத்தின்கணுள்ள
நன்குமதிப்பு	உயர்வாகமதித்தல்
செக்கழுத்தமிக்கு மையை	மிகவுந்தலைமெடுப்புடையனவாம் (சுரு)

க்ளைகளைத்தம்மடைந்தார்க்குற்றுழியுமற்றோர் ... *
விளைவுன்னிவெற்றுடம்புதாங்கார்- தளர்நடைய ... *
தானுடம்பென்றுபுகழுடம்பேம்புநர்கே *
தானுடம்பட்டார்கடாம் ... ... *

பதம்.	பொருள்.
ஊனுடம்பு...	இறைச்சியாலாகியஉடம்பு

தளர்நடையதென்று-பிணிமூப்புமுதலியவற்றால்த
[ளருமியல்புடையதென்று
புகழுடம்பு ... அவ்வாறுதளராத புகழுடம்பை
[யடைந்து
ஓம்புதற்கே ... பாதுகாத்தலுக்கே
உடம்பட்டார்கள் உடம்பட்டவர்கள்
களைகணு ... ... ஆதரவாக
தம்மடைந்தார்க்கு-தம்மையடைந்தவர்க்கு
உற்றுழியும் துன்பஞ்சிறிதுவந்தவிடத்தும்
மற்றோர்விளைவு-உலகவின்பமுதலாகிய வேறொருப
[யன் அனுபவித்தலை
உன்னி ... உட்கொண்டு
வெற்றுடம்பு ... பயனில்லா உடம்பை
தாங்கார் தாங்கிக்கொண்டுவாளாஇரார்
தாம்-தான் ... அசை (௬௰)

தம்முடையாற்றலுமானமுந்தோற்றுத்த *
பின்னுயிரோம்பினுமோம்புக-பின்னர்ச் *
சிறுவரையாயினு மன்றதமக்காஞ் *
சிறுவரையில்லையெனின் *

பதம். பொருள்.

பின்னர் ... மேல்

சிறுவனாயாயினும்-கணப்போதாயினும்

சமக்கு	...	இழிதொழில்புரிந்து-தம்முயி [ராக்காக்குமவர்க்கு
இறுவரா		சாங்காலம்
இல்லையெனின்		இல்லையென்னுந் துணிவுளதா [யின்
தம்முடை	...	தம்முடைய
ஆற்றலும்	...	...வலியும்
மாநமும்	...	பெருமையும்
தோற்று	...	...இழந்து
தம்	... ...	தம்முடைய
இன்னுயிர்	...	இன்னுயிரை
ஓம்பினுமோம்புக	...	காக்கினுங்காக்க
ஆங்கு	... ...	அசை

(௬௧)

௩ன்ற - தேற்றத்தின்கண் வந்தது

குலனழிந்தகற்புடைப்பெண்டிருமைந்து ... *
புலனெருங்கப்பொய்யொழிந்தாரும் - கொலைநாட்
பின், மொய்ம்புடை வீரருமஞ்சார் முரண்மறலி
துப்பைமுடிசூடினும் ... ... *

பதம்.	பொருள்.
ஈலனைழிந்த ...	மங்கலநாணிழந்த
கற்புடைப்பெண்டிருங்	கற்புடையகுல மகளிரும்
ஐந்துபுலனொருங்க	ஐம்புலன்கெட [தை
பொய் ...	... பொய்யாயஉலக இன்பத்
ஒழிந்தாரும் ...	விட்டோரும்
கொலைக்களாட்டின்	...கொலைக்களத்தில்
மொய்ம்புடை ...	ஆற்றலையுடைய
வீரரும்	வீரர்களும்
மூரண்மறலி	திண்மையையுடையநமன்
தும்பை ...	...பொருவார்சூடுந்தும்பைப் [பூமாலையை
முடிசூடினும் ...	முடியிற்குடியெதிர்ப்பினும்
அஞ்சார் ...	தந்நிலையி னின்றுங் கலங்கார்

டீபூநெரிந்துபுண்ணுருகிபோசனைநாறும் ... ※
கழிமுடைநாற்றத்தவேனும் - விழலர் ... ※
விரிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்
டார், சுளியார்சுமைபோடுதற்கு ... ... ※

பதம்.	பொருள்.
விழலர்	அறிவில்லார்
புண்ணழுகி ...	புண்களழுகி
புழுநெளிந்து	தம்முடம்புகள்புழுக்கள்நெளித்து
யோசனை ...	யோசனைதூரம்
நாறும் ...	வீசுகின்ற
கழி ...	மிக்க
முடைநாற்றத்தவேனும்...	தீநாற்றத்தையுடையவாயினும்
விளிவு	சாதலை
உன்னி ...	நினைத்து
வெய்துயிர்ப்பர்	பெருமூச்சுவிடுவர்
மெய்ப்பயன்	உடம்பாலாகிய அறப்பயனை
கொண்டார்	செய்துகொண்டார்
சுமை ...	உடம்பாகியசுமையை
போடுதற்கு	போட்டுவிடுதற்கு
சுளியார் ...	வெறுப்படையார்

இகழினிகழ்ந்தாங்கிறைமகனென்று ... *
புகழினுமொக்கப்புகழ்ப-விகன்மன்னன் ... *
சீர்வழிப்பட்டதே மன்பதைமற்றென்செய்யு *
நீர்வழிப்பட்டபுணை ... ... *

பதம்.	பொருள்.
நீர்வழிப்பட்ட	நீரிற்பொருந்திய
புணை	தெப்பம்
மற்றென்செய்யும்	அதன்வழியேசெல்லாது - வே [றென்செய்யவல்லது அதுபோல
மன்பதை	மக்கட்கூட்டம்
இகல்	மாறுபாட்டையுடைய
மன்னன்	அரசனது
சீர்வழிப்பட்டது...	குறிப்பின்வழிப்பட்டது
இறைமகன்	அரசன்
இகழின்	ஒன்றையிகழ்வானாயின்
இகழ்ந்து	தாமுங்கூடஇகழ்ந்து
ஒன்றுபுகழினும்...	ஒன்றைப்புகழினும்
ஒக்கப்புகழ்ப	அவனோடுகூடத்தாமும்புகழ்வா [ர்கள்

ஆங்கு-ஏ ...... அசை.

செவிசுடச்சென்றுங் கிடித்தறிவுமூட்டி- *
வெகுளினும்வாய்வெரீஇப்பேரா-கவிழ்மதத்த *
கைம்மாவயத்ததேபாகுமற்றெத்திறத்து *
மம்மாண்பினவே யமைச்சு ... ... *

பதம்.	பொருள்.
அமைச்சு	அமைச்சர்கள்
செவி	காதில்
சுட	சுடும்படி
சென்று	போய்நெருங்கி
அறிவுமூட்டி ...	அறிவுகொளுத்தி
வெகுளினும்	அப்போதரசன்கோபித்தாலும்
இடித்து ...	கண்டித்து
வாய்வெரீஇ ...	சொல்லற்கஞ்சி
பேரா	அறிவுறுத்தலைவிடார்கள்
பாகு ...	... செலுத்தும்பாகன்
கவிழ்மதத்த	பெருகுமதத்தையுடைய
கைம்மா ...	துதிக்கையையுடையயானையின்
வயத்ததே	...வசப்பட்டேயிருக்கின்றனன்
எத்திறத்தும் ...	எவ்விதத்தினும்

அம்மாண்பின மந்திரிகளும் அத்தன்மையராவர்
ஆங்கு-ஏ-மற்று அசை. ... ... (௪௫)

கைவரும் வேந்தனமக்கென்று காதலித்த *
செவ்விதெரியா துளையர்க்-கொவ்வொருகா *
லெண்மையனே னுமரியன் பெரிதம்மா ... *
கண்ணில னுள்வெயர்ப்பினன் ... ... *

பதம். பொருள்.

வேந்தன் . அரசன்
ஒவ்வொருகால் ஒவ்வொருகாலத்தில்
எண்மையனேனும்... சொல்லிக்கொள்ளுதன் முத [லியவற்றிற்கெளியனாயிருந்தாலும்
பெரிது பலகாலம்
அரியன். ... அரியனாயிருப்பன்
கண்ணிலன் கண்ணோட்டமில்லான்
உள்வெயர்ப்பினன் உள்ளத்திற்கோபமுடையவன் [ஆதலால்
நமக்கு ... நமக்கு
கைவருமென்று பழகினவனென்று
காதலித்த ... விரும்பினவற்றை

செவ்விதெரியாது ... காலமறியாமல்
உரையற்க ... சொல்லற்க
அம்மா ... ... வியப்பு (சகி)

பழைமைகடைப்பிடியார் கேண்மையும்பாரார் *
கிழமைபிரிதொன்றுங்கொள்ளார்-வெகுளின்மற் *
காதன்மையுண்டேயிறைமாண்டார்க்கேதிலரு *
மார்வலருமில்லையவர்க்கு. ... ... *

பதம்.	பொருள்.
பழைமை	தொன்றுதொட்டுவந்தநட்பையும்
கடைப்பிடியார்	மறவாமலிரார்
கேண்மையும்	தாங்கொண்டசிநேகத்தையும்
பாரார் ...	உட்கொள்ளார்
கிழமைபிறிதொன்றும்	வேறோருரிமையினையும்
கொள்ளார்	*மதித்துக்கொள்ளார்
வெகுளில்	கோபிக்குமிடத்து
இறைமாண்டார்க்கு-அரசப்பண்புடையார்க்கு	
காதன்மையுண்டே-அன்புடைமையுண்டோ	
அவர்க்கு	அவ்வரசர்க்கு

ஏதிலரும் ... அயலோரும்
ஆர்வலரும் ... உறவோரும்
இல்லை ... இல்லை
மன் ... அசை ... (௪௭)

மன்னர்புறங்கடைக் காத்துவறிதேயா ... *
மெற்றலங்காண்டுமென் றெள்ளற்க-பன்னெடுநாட்
காத்தவையெல்லாங்கடைமுறைபோய்க்கைகொடுத்
து, வேத்தவையின்மிக்குச்செயும் ... *

பதம்.	பொருள்,
யாம்	நாம்
மன்னர்	அரசருடைய
புறங்கடைக்காத்து-	தலைவாயில்காத்து
வறிதே ...	பயனில்லை
எற்றலம் ...	யாதுபயனை
காண்டுமென்று ...	கண்டோமென்று
எள்ளற்க	இகழற்க
பன்னெடுநாள் ...	பலநாள்
காத்தவையெல்லாம்	காத்திருந்தவையெல்லாம்
கடைமுறைபோய்-	முடிவிற்சென்று

கைகொடுத்து	உதவி
*வேத்தவையில்	இராசசபையில்
மிக்குச்செயும்	யாவரினுமிக்கிருக்கச்செய்யும்

*வேத்து-வேத்தெனவிகாரப்பட்டது.

உறுதிப்பயப்ப கடைபோகாவேனு ... *
மிறுவனாகாறுமுயல்ப-விறுமுயிர்க்கு *
மாயுண்மருந்தொழுக்க நீதன்றலல்லனபோ *
லாவனவுமுண்டுசில ... ... *

பதம்.	பொருள்,
உறுபயப்ப	நன்மைபயக்கத்தக்கமுயற்சிகள்
கடைபோகாவேனும்	முற்றப்பெறுவிடினும்
இறுவனாகாறும்	தம்முடிவுகாலமட்டும்
முயல்ப	விடாதுமுயலுவர்
இறுமுயிர்க்கும்	இறக்குமெனக்காணப்பட்ட உயிர் [கட்கும்
ஆயுண்மருந்து	பிழைக்குமருந்தை
ஒழுக்கல்	வாயில்விடுதல்

தீதன்று — குற்றமன்று ஏனெனில.
சில — சிலகருமங்கள்
அல்லனபோல்-ஆகாதனபோற்காணப்பட்டு
ஆவனவுமுண்டு-பின்னர் ஆகுவனவுமுண்டு
ஆல் ... அசை ... (ருசு)

முயலாதுவைத்து முயற்றின்மையாலே *
யுயலாகாவூழ்த்திறத்த வென்றோர்-மயலாயு *
மூற்றமிழுவிளக்க மூழுண்மைகாண்டுமெனீ *
றேற்றமொழிகாண்முகத்து ... ... *

பதம். — பொருள்.

முயலாதுவைத்து-அறிவுடையோர்முயற்சி செய்யா
[மலிருந்துகொண்டு
முயற்றின்மையாலே } முயற்சிசெய்யாமையினாலே
ஊழ்த்திறத்த — ஊழ்வினையின்பகுதிகள்
உயலாகாவென்றோர் — தப்புவனவல்லவென்றுகருதார்
மயலாயும் — மயங்கியும்
ஊற்றமிழுவிளக்கம் } மனவலியில்லாத்தீபத்தை

ஊழ் முன்மை ... ஊழ்வினையுளதென்பதை
காண்டுமென்று ... கண்டிருக்கிறோமென்று
எதிர்கான்முகத்து ... வீசுங்காற்றுக்கெதிரில்
தூற்றார் ... ... எற்றார்கள் (௫௰)

உலையா முயற்சி களைகளூ ழின் ... ✻
வலிசிந்தும் வன்மையு முண்டே யுலகறியப் ... ✻
பான்முளை தின்று மறலியுயிர்குடித்த ... ✻
கான்முளையே போலுங் கரி ... ... ✻

பதம்.	பொருள்.
உலையா ...	கெடாத
முயற்சி ...	முயற்சியானது
களைகளூ ...	ஆதரவாக
ஊழின் வலி ...	ஊழின்வன்மையை
சிந்தும் ...	கெடுக்கிற
வன்மையும் ...	ஆற்றலும்
உண்டே ...	உண்டே அதற்கு
உலகு ...	மூன்றுலகத்தாரும்
அறிய ...	அறியும்படி
பான்முளை ...	ஊழின்முளையை

தின்று ... கெடுத்து
மறலி ... ... நமனுடைய –
உயிர் .. .. பிராணனை
குடித்த ... உண்ட
கன்மூளையே ... பிள்ளையாகியமார்க்கண்டே [யனோ
கரி ... சாட்சி
போலும் ... அசை (ருக)

காலமறிந்தாங் கிடமறிந்துசெய் வினையின் ... *
மூலமறிந்துவிளைவறிந்து -. மேலுந்தாஞ் ... *
சூழ்வன சூழ்ந்து துணைமைவலிதெரிந் ... *
தாள்வினையாளப்படும்... ... ...*

பதம். பொருள்

தாம்... ... ...அரசர்கள் தாம்
காலமறிந்து பகைமேற்செல்லுங்காலமறிந்து
இடமறிந்து ... ...செல்லுமிடமறிந்து
செய்வினையின் ... செய்யக்கருதியகருமத்தின்
மூலமறிந்து... காரணத்தையறிந்து
விளைவறிந்து ... ...அதனால்வருட்பயனையறிந்து
மேலும் ... பின்னும்

சூழ்வன ... ஆராயத்தக்கவற்றை
சூழ்ந்து... ...பெரியோரோடு ஆராய்ந்தறிந்து
துணைமை... தமக்குமாற்றார்க்குந் துணையாயினரா
[து
வலிதெரிந்து .. பலத்தையறிந்து
ஆள்வினை பின்ட முயற்சியால்
ஆளப்படும் ... கருதியவினைசெயப்படும்
ஆங்கு ... அதை (ருஉ)

மெய்வருத்தம்பாரார்பசிநோக்கார்கண்டுஞ்சா...*
ரெவ்வெவர் தீமையுமேற்கொள்ளார்-செவ்வி ... *
யருமையும்பாராரவமதிப்புங்கொள்ளார் ... *
கருமமேகண்ணாயினார்... ... ...*

பதம். பொருள்.

கருமமே ... தான்செய்யத்தொடங்கிய காரிய
[த்திலேயே
கண்ணாயினார் ...கண்வைத்திருக்கிறவர்கள்
மெய் ... உடம்பின்
வருத்தம் வருத்தத்தை
பாரார் ... நோக்கார்

பசி ... பசியை
நோக்கார் ... பாரார்
கண்டுஞ்சார் ... நித்திரைசெய்யார்
எவ்வெவர் ... எவர்செய்யும்
தீமையும் ... பொல்லாங்கையும்
மேற்கொள்ளார் ... உட்கொள்ளார்
செவ்வி ... காலத்தின்
அருமையும் ... அருமையையும்
பாரார் ... நோக்கார்
அவமதிப்பும் ... அவமானத்தையும்
கொள்ளார் ... உட்கொள்ளார் (ருசு

சிறியபகையெனினுமோம்புதறேற்றார் ... *
பெரிதும்பிழைபாடுடையார் - நிறைகயத் ... *
தாழ்நீர்மடுவிற்றவளைகுதிப்பினும் ... *
யானைநிழல்காண்பரிது ... ... *

பதம்.	பொருள்.
நிறைகயத்தாழ்நீர்மடுவில்	நிறைந்து ஆழமாகிய நீனாயுடையமடுவில்
தவளை	தவளையான் து
குதிப்பினும்	குதித்தாலும்

ானைநிழல் ... யானைநிழலை
ாண்பரிது... அம்மடுவிற்காண்பதரிது அதுபோல
ளை க ... ...பகைகள்
ிறியவெனினும்-சிறியவாயிருப்பினும்
ம்புதல் ... அவற்றைப்பாதுகாத்தலை
ந்தற்ரூர்... ...அறியாதார்
ிழைபாடு ... பிழையுறுதலை
பெரிதுமுடையர்-மிகுதியுமுடையராவர் (௫௪)

புறப்பகைகோடியின் மிக்குறினுமஞ்சா ... *
ரகப்பகையொன்றஞ்சிக்காப்ப-வனைத்துலகுஞ் ... *
